**தலைப்பு : 316 – வடமேல் மாகாண சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

## 1. தூரநோக்கு, செயற்பணி மற்றும் பிரதான செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

சுபீட்சமான வடமேல் மாகாண மக்கள்

### 1.2 செயற்பணி

வடமேல் மாகாண மக்களுக்கு மிகவும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்துகொள்வதற்காக பயனுறுதியாகவும் தரமான முறையிலும் சேவையினை வழங்குவதற்கு அர்ப்பணித்தல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபையின் அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கடமைகளையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதல்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

வடமேல் மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 25,950,900,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை இதில் ரூபா 19,036,603,842 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 6,914,296,158 தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 26.64 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 21,943,000,000 | 16,413,000,000 | 5,530,000,000 | 25.20 |
| மூலதனம் | 4,007,900,000 | 2,623,603,842 | 1,384,296,158 | 34.54 |
| மொத்தம் | 25,950,900,000 | 19,036,603,842 | 6,914,296,158 | 26.64 |

மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபை நிதியத்தின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.